P.R.NO:-17

05/02/2020

ந.க.எஸ்1/1153/2020
நாள்: 6. 02.2020

மாவட்ட வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி.

## நாளிதழ் செய்தி

பொது விநியோகத் திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கும், மக்களின் குறைகளைக் கேட்டு உடனுக்குடன் அவற்றை நிவர்த்தி செய்யவும், உணவுப்பொருள் வழங்கல் தொடர்பான பொதுமக்கள் குறை கேட்கும் கூட்டம் மாதந்தோறும் நடத்த உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வருகின்ற 8.02.2020 சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் நண்பகல் 01.00 மணி வரை கீழ்கண்ட வட்டங்களில் அதன் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள நியாய விலை அங்காடிகளில் பொது விநியோகத்திட்ட குறைதீர்க்கும் நாள் கூட்டம், தனி வட்டாட்சியர்கள் / வட்ட வழங்கல் அலுவலர்களால் நடத்தப்பட உள்ளது. இதற்கு ஒவ்வொரு வட்டத்திற்கும் துணை ஆட்சியர் நிலையில் ஒரு கண்காணிப்பு அலுவலர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

| வ. எண் | வட்டத்தின் பெயர் | குறைதீர் நாள் கூட்டம் நடைபெறும் இடம் | நியாய விலை கடை மற்றும் குறியீடு எண் | கண்காணிப்பு அலுவலர் |
|---|---|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி கிழக்கு | நியாயவிலைக்கடை வளாகம் | மேலகல்கண்டார் கோட்டை 13JP011PN | இணைப்பதிவாளர் கூட்டுறவு சங்கங்கள், திருச்சிராப்பள்ளி |
| 2 | திருச்சிராப்பள்ளி மேற்கு | நியாயவிலைக்கடை வளாகம் | மார்சிங்கம்பேட்டை -2 13AE002PN | வருவாய் கோட்டாட்சியர் திருச்சிராப்பள்ளி. |
| 3. | ஸ்ரீரங்கம் | நியாயவிலைக்கடை வளாகம் | திருவளர்ச்சோலை 13BB011PN | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், திருச்சிராப்பள்ளி |
| 4. | மணப்பாறை | நியாயவிலைக்கடை வளாகம் | டி.கோவில்பட்டி 13CP102P1 | சார் ஆட்சியர், ஸ்ரீரங்கம். |
| 5. | மருங்காபுரி | நியாயவிலைக்கடை வளாகம் | செவந்தம்பட்டி 13CP050PY | துணைப்பதிவாளர் (பொ.வி.தி) திருச்சிராப்பள்ளி |
| 6. | இலால்குடி | நியாயவிலைக்கடை வளாகம் | ஆதிகுடி 13DP059PY | வருவாய் கோட்டாட்சியர், இலால்குடி |
| 7. | மண்ணச்சநல்லூர் | நியாயவிலைக்கடை வளாகம் | கிளியநல்லூர் 13EP044PY | மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், திருச்சிராப்பள்ளி |
| 8. | முசிறி | நியாயவில்லைக்கடை வளாகம் | முத்தம்பட்டி 13FP023PN | வருவாய் கோட்டாட்சியர், முசிறி. |
| 9. | துறையூர் | நியாயவிலைக்கடை வளாகம் | பூனாட்சி 13GP076P1 | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், திருச்சிராப்பள்ளி |
| 10. | தொட்டியம் | நியாயவிலைக்கடை வளாகம் | சமத்துவபுரம் 13HP073P2 | தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்புத் திட்டம் |
| 11. | திருவெறும்பூர் | நியாயவிலைக்கடை வளாகம் | குண்டூர் 13APO11PY | மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திருச்சிராப்பள்ளி |

எனவே, தொடர்புடைய நியாயவிலைக் கடைகளில் ஏற்படும் பொது விநியோகத்திட்டம் தொடர்பான குறைபாடுகளை மேற்காணும் கூட்டங்களில் கலந்து கொண்டு தெரிவித்திடலாம் என திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் **திரு.சு.சிவராசு, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.